# யூலை – 02 – திங்கள்

**துன்ப வேளையில் என்னைக் கூப்பிடுங்கள்: உங்களைக் காத்திடுவேன்: திபா. 50:15**

## முதல் வாசகம்: ஆமோஸ்: 2: 6,10,13 - 16

ஆண்டவர் கூறுவது இதுவே:“இஸ்ரயேல் எண்ணற்ற குற்றங்கள் செய்ததற்காக நான் கொடுத்த தண்டனைத் தீர்ப்பை மாற்றவே மாட்டேன் ஏனெனில், அவர்கள் நேர்மையாளரை வெள்ளிக் காசுக்கும் வறியவரை இருகாலணிக்கும் விற்கின்றார்கள்.மேலும், எகிப்து நாட்டிலிருந்து உங்களை அழைத்துவந்து, நாற்பது ஆண்டுகள் பாலைநிலத்தில் உங்களை வழிநடத்தி, எமோரியர் நாட்டை நீங்கள் உரிமைச் சொத்தாக்கிக் கொள்ளச் செய்தேன். வைக்கோல் பொதிநிறைந்த வண்டி அழுந்துவதுபோல, உங்களையும் நீங்கள் இருக்கும் இடத்திலேயே அழுத்துவேன். விரைந்தோடுகிறவனும் தப்பமுடியாது.வலிமையுள்ளவனும் தன் வலிமையை இழந்துவிடுவான். வீரனாலும் தன்னுயிரைக் காத்துக் கொள்ளமுடியாது.வில்லேந்தும் வீரன் எதிர்த்து நிற்கமாட்டான். விரைந்தோடுபவனும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளமாட்டான், குதிரை வீரனாலும் தன்னுயிரைக் காத்துக்கொள்ள முடியாது.அந்நாளில் வலிமை மிக்கவர்களுள் நெஞ்சுரம் கொண்டவன்கூடப் படைக்கலன்களைத் தூக்கி எறிந்துவிட்டு ஓடுவான்” என்கிறார் ஆண்டவர்.

**பதில்பாடல் :** கடவுளை மறந்தோரே இதைக் கண்டுணருங்கள்

## நற்செய்தி : மத்தேயு 8 : 18 - 22

அக்காலத்தில் இயேசு திரளான மக்கள் தம்மைச் சூழ்ந்திருப்பதைக்கண்டு, மறுகரைக்குச்செல்ல சீடர்களுக்குக் கட்டளையிட்டார். அப்பொழுது மறைநூல் அறிஞர் ஒருவர் வந்து, ”போதகரே, நீர் எங்கேசென்றாலும் நானும் உம்மைப் பின்பற்றுவேன்” என்றார்.இயேசு அவரிடம், ”நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மானிட மகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை” என்றார். இயேசுவின் சீடருள் மற்றொருவர் அவரைநோக்கி, ”ஐயா, முதலில் நான்போய் என்தந்தையை அடக்கம் செய்துவிட்டுவர அனுமதியும்” என்றார். இயேசு அவரைப்பார்த்து, ”நீர் என்னைப் பின்பற்றி வாரும். இறந்தோரைப்பற்றிக் கவலைவேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள்” என்றார்.

**தியானம்:** இயேசு இன்றைய நற்செய்தியில் குறிப்பிட்டுள்ள இரு நிகழ்வுகளிலும் கொஞ்சம் கடுமையாக நடந்து கொள்வது போல் தெரிகிறது. தன் சொந்த தந்தையை அடக்கம் செய்யக்கூடத் தன் சீடருள் ஒருவருக்கு அனுமதி மறுக்கிறார். இதன் வழியாக சீடத்துவத்திற்கான முக்கிய தடைகளைச் சுட்டிக்காட்டி அதிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள அழைப்பு விடுகின்றார். இன்று மனிதர்களின் வாழ்வை ஆட்டிப்படைக்கின்ற ஒன்று” பற்று” சிலர் பணத்தை பற்றிப்பிடிக்கின்றனர். வேறு சிலர் வசதியை, உறவுகளைப் பற்றிப்பிடித்துக் கொண்டு அதற்கு வாழ்நாள் முழுவதும் அடிமையாகிக்கிடக்கின்றனர். மேற்கூறியவைகளினால் நமக்கு மகிழ்ச்சியும் நிறைவும் கிடைக்கும் என்ற எண்ணம் தான் நாம் அவற்றை பற்றிப்பிடிப்பதற்கான தூண்டுதலைத்தருகின்றது. ஆனால் கொடி படர்வதற்கான ஊன்றப்பட்ட கொழுகொம்பே அந்தக் கொடிமீது விழுந்து அதை நசுக்குவது போல் நம் மகிழ்ச்சிக்கு காரணம் என்று எண்ணுகின்ற பணம் ,பொருள் அதீத உறவுப்பற்று முதலியவைகளே நம்மகிழ்ச்சியின்மைக்கு காரணமாகி விடுகின்றன. பற்று ஒரு மனிதனின் ஆன்மாவையும் ஆளுமையையும் சிதைக்க வைத்து சிறைப்பிடிக்கக்கூடியது. ஆன்மீக வாழ்வில் வளர்ச்சிக்கு தேவையான சுதந்திரத்தை நம்மிலிருந்து பறிக்க வல்லது. இதன்காரணமாகத்தான் பொருள் மீது பற்றுக்கொண்ட மறை நூல் அறிஞரால் தன்னைப்பின்பற்ற இயலாது, தந்தை மீது கொண்ட பற்றிலிருந்து வெளிவர வேண்டும் என்று தம்சீடர் ஒருவரிடமும் இயேசு கூறுகின்றார். எனவே நம்முடைய வாழ்வில் எதை அதிகமாக பற்றிக்கொள்கின்றோம் என்பதை சிந்தித்து பார்த்து வாழக்கற்றுக்கொள்வோம்.